# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-திருவண்ணாமலை மாவட்டம்

(29.06.2016 முதல் 03.07.2016 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (24.06.2016 முதல் 27.06.2016)**

திருவண்ணாமலை மாவட்டத்தில் நான்கு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 7.5 மி.மீ அளவு மழை பெய்தது அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 31.0-33.0°C மற்றும் 25.0-26.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 58 முதல் 71 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 8-11 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 29.06.2016 | 30.06.2016 | 01.07.2016 | 02.07.2016 | 03.07.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 2 | 0 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்று வரும் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 25 | 25 | 25 | 25 | 25 |
| ஈரப்பதம் | 70-68 | 70-68 | 70-68 | 70-68 | 70-68 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி,வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.
2. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுரோடோப்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டேருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. காய்கறி பயிர்களின் உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவித அளவு வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்
3. தோட்ட பயிர்களின் வேர் பகுதிகளில் தேங்காய் நார் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கலாம்.